மலர் 2 இதழ் 2 அக்டோபர் 2017 ISSN – 2454-3993

# ஐவ்வாது மலை மக்களின் ஏழு அண்ணன்மார் கதை

**முனைவர் கதி. முருகேசன் (கதிர்முருகு)**
உதவி பேராசிரியர், தமிழ்த்துறை
கணேசர் கலை அறிவியல் கல்லூரி
மேலைச்சிவபுரி

**ரே.கோவிந்தராஜ், எம்.ஏ., பி.எட்.,**
முனைவர் பட்ட ஆய்வாளர்
உதவிப் பேராசிரியர்
மாநிலக் கல்லூரி, சென்னை

கிழக்குத் தொடர்ச்சி மலைகளுள் ஒன்றாக அமைந்திருப்பது ஜவ்வாது மலை. வேலூர், கிருட்டிணகிரி ஆகிய மாவட்டங்களில் பரவிக்கிடக்கும் இம்மலையில் முந்நூறுக்கும் மேற்பட்ட மலைக்கிராமங்கள் உள்ளன. அறிவியல் மற்றும் நவீனத் தொழில்நுட்பம் மேம்பட்டிருக்கும் இந்நாளில் ஜவ்வாது மலை மக்கள் தங்களுக்கேயுரிய நாகரிக, பண்பாட்டுக் கூறுகளை இன்றைக்கும் போற்றி வருகின்றனர். உணவு, பழக்கவழக்கம், விழாக்கள்வழிபாடுகள், நம்பிக்கைகள், சடங்குகள், மருத்துவம் முதலான வாழ்வியல் கூறுகளை பழமை மாறாமல் கடைப்பிடித்து வருகின்றனர்.

ஜவ்வாது மலை மக்கள் தொன்றுதொட்டுக் கலைகளைக் காத்து வருகின்றனர். குறிப்பாக தெருக்கூத்துக்கலை ஜவ்வாது மலையில் செல்வாக்குப்பெற்று விளங்குகிறது. அவ்வாறே கதைகளும் கதைப்பாடல்களும் மலைவாழ் மக்களின் ஆடல்களும் சிறப்புப் பெறுகின்றன. கதை கூறும் வழக்கமும் கதைகேட்கும் வழக்கமும் தொன்மைக் காலந்தொட்டே மக்களிடம் காணப்படுவதாகும். ஜவ்வாது மலைமக்களின் வாழ்வில் “ஏழு அண்ணன்மார் கதை” செல்வாக்கான கதை வடிவமாக வழங்கி வருகிறது. இக்கதை மனிதனுக்கு அறம் கூறும்வண்ணம் அமைவது சிறப்பாகும்.

“பிள்ளைப்பேறு இல்லாதபெண் ஒருத்தி இறைவனைநோக்கிக் குழந்தைப்பேறு வேண்டித் தவம் மேற்கொண்டிருக்கிறாள். அவளுடைய கடுமையான தவத்தைக்கண்டு மனம் மகிழ்ந்த இறைவன் அவள் முன் தோன்றி என்ன வரம் வேண்டும் கேள் என்று கூற, அவள் தனக்குப் பிள்ளைப் பேறு இல்லாத காரணத்தைக் கூறி, பிள்ளைப்பேற்றுக்கான வரத்தை வேண்டிநிற்கிறாள். இறைவன் அவளிடம் ஒவ்வொன்றாக எண்ணி ஏழு மிளகுகளையும் எண்ணாமல் ஏழு மிளகுகளையும் தனித்தனியாகக் கையில் கொடுத்து இம்மிளகுகளை உன் வீட்டிற்குக் கொண்டுசெல் மிளகுகளின் எண்ணிக்கையில் உனக்குக் குழந்தைகள் பிறக்கும் என்றுவரம் அருளினார்.

இறைவனின் வரத்தால் மகிழ்ச்சியடைந்த பெண் இறைவன் எண்ணாமல் கொடுத்த ஏழு மிளகுகளை எண்ணத் தொடங்குகிறாள். அம்மிளகுகளில் ஒன்று கை தவறி விழுந்துவிடுகிறது. அவள் வருத்தம்கொண்ட மனம் உடையவளாக மிளகுகளை வீட்டில் வைத்திருக்க ஏழு மிளகுகளும் ஏழு ஆண் குழந்தைகளாகத் தோற்றம் பெற்றன. ஏழு ஆண் குழந்தைகளும் வளர்ந்துவந்தனர். தாய் அவர்களை மகிழ்ச்சியுடன் விவசாயத் தொழிலில் ஈடுபடுத்தினாள். அண்ணன் தம்பியர் எழுவரும் ஒற்றுமையுடன் பணிசெய்து வந்தனர். தாய்

தன் மகன்களுக்குத் தேவையான களியைச் சமைத்துத் தினமும் வயலுக்குக் கொண்டுசென்று கொடுத்துவிட்டு அங்கிருக்கும் பிறபணிகளைச் செய்துவிட்டு மாலைவீடு திரும்புவாள். இந்நிகழ்வு தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

சில நாட்களுக்குப் பிறகு வீட்டில் மர்மமான நிகழ்வு நடக்கத் தொடங்கியது. தாய் வயலுக்கு உணவுக் கொண்டுசென்ற பின் யாரோ வீட்டுக்கு வந்து வீட்டைத் தூய்மை செய்து பாத்திரங்களை விளக்கி வைத்து வீட்டுக்குத் தேவையான தண்ணீரைப் பிடித்து வைத்துவிட்டு மாயமாக மறைவதைத் தாய் அறிந்தாள். வீட்டுக்கு வந்து செல்வது யார் என்று ஒரு நாள் மறைந்திருந்து பார்த்துக் கண்டுபிடித்து விடுகிறாள். தன் கையில் இருந்து தவறி விழுந்த மிளகே தற்போது பெண்ணாக வடிவம் கொண்டது என்று முடிவு செய்தாள். தன் ஏழு மகன்களிடம் இதனைக் கூற அவர்களும் அவளைத் தங்களின் தங்கையாக மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர்.

அண்ணன்கள் ஏழு பேரும் அதிகாலையில் எழுந்து வயலுக்குச் சென்ற பின்னர் தாயின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட தங்கை அண்ணன்கள் அனைவருக்கும் மதிய உணவிற்காக் களி உருண்டைகளைக் கொண்டு சென்றாள். பாத்திரம் ஒன்றில் ஏழு உருண்டைகளைக் கொண்டு காட்டுவழியில் முதல்முறையாகப் பயணம் செய்தாள். அடர்ந்த காடாதலால் அவளுக்கு வழி தெரியவில்லை. அப்போது அவள் அவ்வழியாக வந்த நாயிடம் வழி கேட்கிறாள். அதற்கு அந்தநாய், “மஞ்சள் பூசி மனைக்குப் பொண்டாட்டியாக வருகிறாயா? வழி சொல்கிறேன்” - என்றது. அதற்கு அவள் ‘அடி தொடப்பத்தால’ என்று கூறியவாறே நடந்து செல்கிறாள். அப்போது தனக்கு எதிர்ப்பட்ட பூனை, நரி ஆகியவற்றிடம் வழி கேட்க அவையும் நாய் கூறியவாறே கேட்க, நாய்க்குக் கூறிய பதிலையே கூறித் தொடர்ந்து செல்கிறாள். சிறிது தொலைவு சென்ற பின் மான் ஒன்று எதிர்ப்பட அதனிடம் வழி கேட்கிறாள். மான் அவளிடம், “மஞ்சள் பூசி மனைக்குப் பொண்டாட்டியா வருகிறாயா? வழி சொல்கிறேன்” என்று கூறியதும் அவளும் அதற்கு உடன்பட்டுத் தன் அண்ணன்களுக்குக் கொண்டு சென்ற களி உருண்டையில் ஒன்றை எடுத்து அதில் பாதியை மானுக்குக் கொடுக்கிறாள். மான் அவளுக்கான வழியினைக் கூறுகிறது. அதன்பின் அவள் தினமும் வரும் வழியில் மானைச் சந்திப்பதும் அதற்கு உணவு கொடுப்பதும் தொடர்கிறது. தினமும் அவள் மான் இருக்குமிடத்தை அடைந்ததும் சினானன் போட்ட வேலியை சிள்ளென்று தாண்டிவா புள்ளிமானே என்று பாட மான் அவளிடம் ஓடி வந்துவிடும். அவளும் அதற்கு உணவு கொடுத்து மடியில் உறங்க வைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தாள்.

ஏழு அண்ணன்களில் கடைசி அண்ணனுக்கு மட்டும் களி உருண்டையில் பாதி கிடைப்பது கண்டு அவன் தன் தங்கையிடம் கேட்க, அவள், “அம்மாதான் பாதிக்களி உருண்டையைக் கொடுத்து அனுப்பினாள்” என்று சொல்ல, உண்மைக் காரணத்தை அறிய வேண்டும் என்று அவன் எண்ணம் கொண்டான். இவ்வாறாய் பல நாட்கள் நகர்ந்தன. அண்ணனும் அவளைத் தொடர்ந்து கண்காணித்து என்ன நடக்கிறது என்பதைக் கண்டுபிடித்தான். ஒருநாள் தங்கை களி எடுத்துவராத நாள் ஒன்றியில் கடைசி அண்ணன் களி எடுத்துச் சென்றான். மாறுவேடத்தில் இருந்த அவன் மான் இருக்கும் இடம் வந்ததும் அவள் பாடிய பாடலைப் பாடி மானை அழைக்க, மானோ குரல் மாற்றத்திற்கான காரணத்தைக் கேட்கிறது. அதற்கு அவன் தனக்குச் சளி பிடித்திருப்பதாகக்கூறி, களியை உண்ணக் கொடுத்து மானை மடியில் தூங்க வைக்கிறான்.

மான் தூங்கியதும் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து அதன் கழுத்தை அறுத்துக் கொன்றுவிட்டுக் கறியைக் கூறுபோட்டு எடுத்துக்கொண்டு தலையை அதே இடத்தில் புதைத்துவிடுகிறான். வீட்டில் மான் கறி சமைத்து அனைவரும் உண்கின்றனர். அப்போது நாய், பூனை ஆகியவை, தன்னாமடியான் கறியைத் தானே தின்கிறாள்…வவ்…வவ்…வவ்…என்றும், தன்னாமடியான் கறியைத் தானே தின்கிறாள்…மியாவ்…மியாவ்…மியாவ்…என்று ஒலி எழுப்ப அவள் இதனைத் தன் தாயிடம் கூறுகிறாள். தாய், அவற்றுக்கு எலும்புத்துண்டு போடு போய்விடும் என்று சமாதானம் கூறுகிறாள். மறுநாள் அவள் வழக்கம் போல் சென்று அவள் பாடும் பாடலைப் பாட மான் அங்குவரவில்லை. பலமுறை அழைத்தபின் பூமிக்குள் இருந்து சத்தம் வர அங்கு தோண்டிப் பார்க்கிறாள். அப்போது வெட்டுப்பட்ட மான் தலை தனக்கு அவள் அண்ணனால் நிகழ்ந்த கொடுமைகளைக் கூற அவள் வீட்டிற்குச் சென்று தன் அன்னையிடம் நடந்ததைக் கூறுகிறாள். அவள் தாயும் இதற்குக் காரணமான சிறிய மகனுக்கு விசம் வைத்துக் கொன்றுவிடுகிறாள்.

ஆறு அண்ணன்களும் தம்பியின் இறப்பு இயல்பாக நிகழ்ந்தது என்று அவனை அடக்கம் செய்துவிட்டு வழக்கமான பணிகளை மேற்கொள்கின்றனர். சிறிதுகாலம் சென்றபின் தங்கைக்குத் திருமண ஏற்பாடு நடக்கிறது. முகூர்த்தநாளில் எங்கும் பூக்கள் கிடைக்கவில்லை. சின்ன அண்ணனைப் புதைத்த இடத்தில் மட்டும் பூக்கள் பூத்திருக்கின்றன. அதனைப் பறிக்க அவளது அண்ணன் செல்கிறான் அப்போது,

**சினானன் அடித்தானென்று**
**சொன்னாளே பொன்னேலி**
**பொன்னேலி கொண்டைக்கு**
**எம்பூவும் ஏறுமா**
**நீயும் ஒருபூவாய் மாறிவிடு**

என்னும் பாடல் ஒலிக்கிறது. பூப்பறிக்கப்போன அண்ணன் பூவாக மாறிவிடுகிறான். இவ்வாறே அண்ணன்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக வந்து பூவாக மாறிவிடுகின்றனர் இதனை அறிந்த தங்கை புலம்பிக்கொண்டே வந்து மரத்தடியில் அமர்ந்து அழ, அவளது அழுகையைக் கண்டு சிவனும் பார்வதியும் எழுந்தருளிவந்து காரணம் கேட்க அவள் நடந்ததைக் கூறுகிறாள். அவளது அண்ணன்களை இருவரும் உயர்பெறச் செய்கின்றனர். கடைசி அண்ணன் மட்டும் தான் பூவாகவே இருந்துவிடுகிறேன். நீங்கள் மகிழ்ச்சியாக வாழுங்கள் என்று கூறுகிறான். தங்கை, தன் தவறுக்கு வருந்தி அண்ணகளிடம் மன்னிப்புக் கேட்கிறாள். பின் அவளுக்குத் திருமணம் நடைபெறுகிறது. அனைவரும் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர்.

ஜவ்வாது மலையில் காணப்படும் ஏழு அண்ணன்மார் கதை சிறந்த கதைக் கட்டமைப்பும் நகைச்சுவையும் அறஉணர்வும் நீதியும் மன்னிக்கும் பாங்கும் நிறைந்த கதையாக வழங்கப்பட்டு வருகிறது.